(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 32.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 யூன் 09 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைசால் காசிம்**

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தமையினால் அக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம் அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு யூன் 08 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் —

(i) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை எச்டிஎப்சீ வங்கியின் ஆண்டறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iv) 2022 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் —

(i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(ii) 2019/2020 ஆம் ஆண்டுக்கான கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2021/2022 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ ரொசான் ரணசிங்க சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ டீ. வீரசிங்கவினால் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2020 ஆம் ஆண்டுக்கான ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு நிதியத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "டெலிகொம் நிறுவனத்தினைத் தனியார்மயமாக்குவதால் தேசிய பாதுகாப்பில் ஏற்படும் விளைவுகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) மினுவன்கெட்டே, நெல்லிய, சந்த செவன எனும் முகவரியியல் வதியும் திருமதி கே.எம்.ஏ. கீரவெல்லவினது 2023.02.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தயாசிறி ஜயசேக்கர சமர்ப்பித்தார்.

(2) காலி, உலுவிட்டகே, வெவேவத்த, இல. 113/4 ஏ யில் வதியும் திரு. ஏ.என்.பி. குணவர்தனவினது 2023.04.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இசுரு தொடன்கொட சமர்ப்பித்தார்.

(3) மஹரகம, பமுனுவ, தேவால வீதி, இல. 98/19பீ எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. ஹேமால் ஜயசிரியினது 2023.06.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜகத் குமார சுமித்ராஆரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 மே 12 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவானது, சபாநாயகரால் நியமிக்கப்படுகின்ற இருபது (20) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி* :** "2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ இரான் விக்கிரமரத்ன பிரேரித்தார். கௌரவ தயாசிறி ஜயசேக்கர அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

"கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.10.50 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

**8. *சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்*::** கௌரவ கின்ஸ் நெல்சன் அனுவதிக்க கௌரவ சமிந்த விஜேசிறி பின்வருமாறு பிரேரித்தார்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. பா. 2/2023.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பயிர்களை சேதப்படுத்துகின்ற மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்::** கௌரவ இசுரு தொடங்கொட அனுவதிக்க கௌரவ நாலக பண்டார கோட்டேகொட பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையில் விவசாயப் பயிர்களுக்கு வன விலங்குகளினால் பெரும் சேதங்கள் ஏற்படுவதாலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் விலங்குகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதமானது வருடாந்தம் சுமார் 40% அதாவது, 1800 கோடி ரூபாய்களை விட அதிகமென்பதாலும், அதிலும் மந்திகளினால் விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்கள் படிப்படியாக அதிகரிக்கின்ற காரணத்தினால் எமது நாட்டின் விவசாயப் பெரு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் நேரடி தாக்கம் ஏற்படுவதாலும், இலங்கை பௌத்த மற்றும் அகிம்சை நெறி கலாசாரத்துடன்கூடியதொரு நாடு என்ற வகையில் மந்திகளைக் கொல்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதை அனுமதிக்க முடியாது என்பதாலும், விஞ்ஞானபூர்வமான செயன்முறையொன்றின் மூலம் மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. பா. 20/2023.

"கௌரவ மொஹமட் முஸம்மில் தலைமை தாங்குவாராக" என கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன முன்மொழிய அதனை கௌரவ கிங்ஸ் நெல்சன் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.11.56 மணிக்கு கௌரவ மொஹமட் முஸம்மில் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. *சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்:*** கௌரவ சமிந்த விஜேசிறி அனுவதிக்க கௌரவ கிங்ஸ் நெல்சன் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. பா.19/2023.

“கௌரவ நாலக பண்டார கோட்டேகொட தலைமை தாங்குவாராக” என கமத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.02 மணிக்கு கௌரவ நாலக பண்டார கோட்டேகொட தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. சிறுவர்களின் சுகாதாரக் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை பாடசாலை மட்டத்தில் பிரபல்யப்படுத்துதல்:** கௌரவ சமன்பிரிய ஹேரத் அனுவதிக்க கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ பின்வருமாறு பிரேரித்தார்,— நச்சுத் தன்மைமிக்க உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் இலங்கையில் சிறுவர்களின் ஆயுட்காலம் குறைவடைதல் மற்றும் கடுமையான நோய்களுக்கு ஆளாகுதல் நிகழ்வதாக பல்வேறு நிறுவனங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் போசாக்குமிக்க உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் உடற் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்து கொள்ள முடியுமென விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய வகையில் சிறுவர்களின் சுகாதாரக் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் சுகாதாரப் பிரிவுடன் ஒன்றிணைந்து தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. பா. 21/2023.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒத்திவைப்பு :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 3.08 மணிக்கு சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரால் 2023 யூன் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.